# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්වය නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

105 – 5th Lane, Colomo – 03, Sri Lanka
Tel: +94 11 2564404, Fax: +94 11 4722632
E-mail: cmev@cpalanka.org Website: http://cmev.wordpress.com


## ஊவா மாகாண சபை, யாழ்பாண மாநகர சபை மற்றும் வவுனியா நகர சபைத் தேர்தல்கள் - 2009

## தேர்தல் தின அறிக்கை

***08 ஆகஸ்ட் மாலை 07.00 மணி*** யாழ்ப்பாண மாநகரசபை, வவுனியா நகர சபை மற்றும் ஊவா மாகாண சபைத் தேர்தல்கள் ஒப்பீட்டளவில் வன்முறைகளற்ற தேர்தலாக அமைந்து காணப்பட்டதுன். 20%, 49% மற்றும் 62% மான வாக்குகள் முறையே அளிக்கப்பட்டுள்ளன.

நடைபெற்ற தேர்தல்களில் யாழ்ப்பாண மாநகர சபைத் தேர்தல் தமிழர்கள் செரிந்து வாழும் பிரதேசத்தில் யுத்தத்திற்கு பின்னரான முதலாவது தேர்தல் என்ற வகையில் கூடிய கவனயீர்ப்பை பெற்றது. அளிக்கப்பட்ட வாக்குகள் 20 % ஆக காணப்பட்டாலும் யதார்த்தத்தில் வாக்காளர் எண்ணிக்கை வாக்காளர் இடாப்பில் பதியப்பட்ட எண்ணிக்கையிலும் அரைவாசியாக காணப்படுகிறது என்ற வகையில் வாக்களிப்பு 40 % ஆக கணிக்கப்பட வேண்டும். ஏறத்தாள 41,000 வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்படமுடியாமல் தபால் நிலையத்தில் தேங்கிக் கிடக்கின்றன. குறிப்பிட்ட வாக்காளர் அட்டைகளுக்குரிவர்கள் அம்முகவரிகளில் காணப்படாமையினாலேயே இவ்வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட முடியாமல் தேங்கிக் கிடக்கின்றன. என்றாலும் தேர்தல் தினம் மதியம் 3.00 மணி வரையில் இவ்வாக்காளர் அட்டைகளை உரியவர்கள் பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

யாழ்ப்பாண மாநகர சபையில் பதிவான குறைந்த வாக்களிப்பு வீதம் பல காரணங்களின் அடிப்படையில் நின்று நோக்கப்படல் வேண்டும்; குறிப்பாக வாக்காளர் குடிப்பெயர்வு, வாழ்வாதர நடவடிக்கைகளின் முக்கியத்துவம் மற்றும் வாழ்க்கை தரம், இடம் பெயர்ந்தவர்களின் அவலநிலையின் பிரதிபலிப்புகள், தேர்தல் அவசியமற்றது அல்லது இக்காலப்பிரிவில் பொருத்தமற்றது என்ற அடிப்படையில் வாக்காளர்களின் ஆர்வமின்மை, முன்கூட்டிய தேர்தல் தொடர்பான முடிவுகள் பற்றிய அபிப்பிராயங்கள் அல்லது மக்கள் கருத்துக்கு அப்பாற்பட்ட விடயங்கள் அரசியலில் முன்னுரிமைப் படுத்தப்பட்டமை உள்ளிட்ட காரணங்களின் அடிப்படையிலேயே பதிவான குறைந்த வாக்களிப்பு வீதம் தொடர்புபடுத்தி நோக்கப்பட வேண்டும்.

குறைந்த வாக்களிப்பிற்கும் கடைசியாக குறிப்பிட்ட காரணத்திற்குமிடையில் நேரிடை தொடர்பிருக்கிறது என்பதை தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) அவதானப்படுத்துகிறது. குறிப்பாக முகாம்களில் வாழ்கின்ற இடம்பெயர்ந் தோருக்கு எந்தளவு தூரம் வாக்காளர் பதிவு தொடர்பான விபரங்கள் கிடைக்கப்பெற்றன என்பதும் முகாம்களில் வாழும் இடம்பெயர்ந்த வாக்காளர்களை அனுக எந்தளவு தூரம் அரசியல் கட்சிகளுக்கு இடமளிக்கப்பட்டது என்பதும் இங்கு குறிப்பாக அவதானப்படுத்தப்பட வேண்டிய விடயங்களாக இருக்கின்றன. தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) முகாம்களில் அரசியல் நடவடிக்கைகளை அச்சுறுத்தும் பல காரணிகள் காணப்பட்டதை முழுமையாக ஏற்பதுடன் இத்தருணத்தில்

தேர்தலென்பது பொருத்தமற்றது என்ற வாதத்தை வலுப்படுத்துவதாக அக்காரணிகள் அமைந்து காணப்பட்டன என்பதனையும் ஏற்றுக்கொள்கிறது.

ஆளும் கட்சி கூட்டணியாளரால் குறிப்பாக பிரதான வேட்பாளர் சசிந்திர ராஜபக்ஷவினால் அரச உடைமைகள் பிரச்சார நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்டமை தொடர்பாக பல குற்றச்சாட்டுகள் ஊவா மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பாக தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) கிடைக்கப்பெற்றது இவ்வாறு அரச உடைமைகள் தேர்தல் பிரச்சாரப்பணிகளின் போது துஷ்பிரயோகப்படுத்தப்படுவது தொடர்ந்து நடைபெறும் தவறான நடைமுறையாகியுள்ளமை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) உள்ளிட்ட அதன் கூட்டு நிறுவனங்கள் ஆதரித்து வாதாடும் தேர்தல்களில் நேர்மைத்தன்மையை பேணி பாதுகாக்க உதவும் 17 வது சீர்த்திருத்தத் சட்டத்தின் முழுமையான அமுலாக்கத்தையும் சுதந்திர ஆணைக் குழுக்களின் நியமனத்தையும் மீண்டும் வலியுறுத்திக் காட்டுகின்றன.

யாழ்ப்பாண மாநகரசபைத் தேர்தல் தொடர்பாக 2 பாரிய வன்முறைச் சம்பவங்களும் 2 சிறிய வன்முறைச் சம்பவங்களும் CMEV நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டன. வவுனியா நகரசபைத்தேர்தல்கள் தொடர்பாக 3 பாரிய வன்முறைச் சம்பவங்களும் 2 சிறிய வன்முறைச் சம்பவங்களும் பதியப்பட்டுள்ளன. ஸ்ரீ.மு.க. வேட்பாளருக்கு எதிரான இரு தாக்குதல் சம்பவங்கள் வவுனியா பிரதேசத்தில் கிடைக்கப்பெற்றதுடன் இலங்கை தமிழ் அரசு கட்சி ஆதரவாளருக்கு எதிரான தாக்குதல் சம்பவமொன்றும் புத்தளம் பிரதேசத்தில்( யாழ்ப்பாண மாநகரசபை) பதிவானதுடன் ஈரோஸ் ஆதரவாளருக்கு எதிரான ஒரு தாக்குதல் சம்பவம் வவுனியா பிரதேசத்தில இருந்து கிடைக்கப்பெற்றது. தொடரான பிரச்சார நடவடிக்கைகள் தொடர்பான இரண்டு சம்பவங்கள் வவுனியாவில் இருந்து தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்திற்கு (CMEV) கிடைக்கப்பெற்றுள்ளன.

தேர்தல் தினத்தன்று 14 வன்முறைச் சம்பவங்கள் பதுளை மாவட்டத்திலிருந்தும் 20 வன்முறைச் சம்பவங்களும் மொனராகலை மாவட்டத்திலிருந்தும் ஊவா மாகாணசபைத் தேர்தல் தொடர்பாக கிடைக்கப்பெற்றன. இவற்றுள் 7 பாரிய வன்முறைச் சம்பவங்கள் பதுளை மாவட்டத்திலிருந்து அறிவிக்கப்பட்டதுடன் 4 பாரிய வன்முறைச் சம்பவங்கள் மொனராகலை மாவட்டத்திலிருந்து கிடைக்கப்பெற்றன. இவ் வன்முறைச் சபவங்களில் பதுளை மாவட்டத்திலிருந்து அறிவிக்கப்பட்ட 2 தாக்குதல் சம்பவங்களும் மொனராகலை மாவட்டத்தில் இருந்து அறிவிக்கப்பட்ட 01 தாக்குதல் சம்பவமும் உள்ளடங்குகின்றன. பதுளை மாவட்டத்தில் இருந்து CMEV கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு அனுமதிக்கப்படாமை தொடர்பான 03 சம்பவங்கள் அறிவிக்கப்பட்டதுடன் மொனராகலை மாவட்டத்தில் இது தொடர்பான 02 சம்பவங்கள் கிடைக்கப்பெற்றன. பதுளை மாவட்டத்தில் இருந்து கட்சி முகவர் ஒருவர் ஐ.ம.சு.மு ஆதரவாளர்களுக்கு சார்பாக வாக்குச் சாவடிக்கு வெளியே பிரசுரங்களை விநியோகிக்கும் சம்பவம் ஒன்று அறிவிக்கப்பட்டது. வாக்காளர் உரிமை தொடர்பான சம்பவம் 01 மொனராகலை மாவட்டத்தில் இருந்து அறிவிக்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற சம்பவங்களின் முக்கிய சம்பவங்களின் விபரங்கள் பின்வருமாறு:

**இரண்டு வேட்பாளர்கள் தாக்கப்பட்டனர்.**

மதியம் 12.00 மணியளவில் எம். ரவிச்சந்திரன் (வேட்பாளர் இலக்கம் 09) மற்றும் லதீப் மொகமட் முனவ்பர் (வாக்களாளர் இலக்கம் 02) ஆகிய ஸ்ரீ.மு.கா. வேட்பாளர்கள் வாக்குச்சாவடி இலக்கம் (01), வ/முஸ்லிம் மஹா வித்தியாலம், பட்டானிச்சி புளியங்குளத்திற்குச் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டு இருக்கும் பொழுது மீள்குடியேற்ற அமைச்சர் ரிஷார்ட் பதுர்தீனின் ஆதரவாளர்களால் தாக்கப்பட்டனர். ரவிச்சந்திரனின் கூற்றுப்படி தாக்குதலை நடத்தியோர் டொயோடா ஐ.எஸ் வேன் (251-5091)ல் வருகை தந்திருந்தனர். தாக்குதலை நடத்தியவர்கள் வேனை அவர் மீது ஏற்ற முயற்சி செய்ததாக ரவிச்சந்திரன் CMEV கண்காணிப்பாளர்களிடம் தெரிவித்தார். ரிஸ்மீ, ரபீஸ், ரிப்தியான், மஜீத் ஆருன் சப்ரி நசீன் உள்ளிட்ட அமைச்சர் ரிஸாட் பதுர்தீன்

அவர்களின் ஆதரவாளர்கள் குழுவினரே இத்தாக்குதல் சம்பவத்தை மேற்கொண்டதாக குறிப்பிட்டார். வைத்தியசாலை பொலிஸ் நிலைய உத்தியோகத்தர் டி. விமலஜித் இச் சம்பவத்தை உறுதிப்படுத்தியதுடன், எம். ரவிச்சந்திரன் சிறிய காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறினார். CMEV அமைச்சர் ரிஸாட் பதுர்தீனுடன் தொடர்புகொண்டு கேட்டபொழுது தனக்கு அச்சம்பவம் தொடர்பாக அறியக்கிடைத்ததாகவும் அச் சம்பவத்துடன் தொடர்பில்லை என்று கூறியதுடன் தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே இவ் இரு குழுக்களும் மோதிக்கொண்டனர் என்றும் தெரிவித்தார்.

**வாக்காளர்கள் மற்றும் ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர்.**
காலை 8.00மணியளவில் இலங்கை தமிழரசு கட்சி வேட்பாளர் திரு. மொகமட் அலி ஜமால்டின் (வாக்காளர் இலக்கம் 12) அவர்களின் சாரதியான எச்.எஸ்.எம் நசீர், முஹாஜீர் உள்ளிட்ட அமைச்சர் ரிசாட் பதுர்தீன் ஆதரவாளர் குழுவொன்றினால் தாக்கப்பட்டார். சாரதி தாக்கப்பட்டதுடன் வாகனத்திற்கும் சேதம் விளைவிக்கப்பட்டதென CMEV நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது. திரு. நசீர் இதுதொடர்பான முறைப்பாடொன்றை (CID 0290/57) புத்தளம் பொலிஸில் மேற்கொண்டுள்ளார்.

வேன் ஒன்றில் வந்த சுதந்திர மக்கள் விடுதலை முன்னனி (பிலெ.ட்) கட்சி ஆதரவாளர்களால் ஈரோஸ் கட்சி ஆதரவாளர் சிவகுமாரன் நகர அபிவிருத்தி சங்கம் குருமன் காடு (வாக்களிப்பு இலக்கம் 03) என்ற இடத்தில் காலை 11.30 மணியளவில் தாக்கப்பட்டதாக CMEV நடமாடும் கண்காணிப்பாளர்கள் தெரிவித்தார்கள். இந்த தாக்குதலில் சிவகுமாரன் சிறிய காயங்களுக்குள்ளாக்கப்பட்டார். பொலிஸ் விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில் பிலொட் முதன்மை வேட்பாளரான கந்தர் தாமோதரம் பிள்ளை லிங்கநாதன் (விருப்பு வாக்கு இலக்கம் 02) இக் குற்றச்சாட்டை மறுத்துரைத்தார். பொலிஸ் இச் சம்பவத்தை CMEV நடமாடும் கண்காணிப்பாளர்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளனர்.

மாலை 3.15 மொனராகலை தேர்தல் தொகுதியில் கரமுட்டிய ஜூனியர் பாடசாலையில் (இலக்கம் 50) வாக்களிப்பு நிலையத்திற்கு அருகாமையில் ஒரு வாக்காளர் தாக்குதலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமான விசாரணைகள் பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தகுந்த ஆளடையாள ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாது போனமையின் காரணமாகவே இம் முரண்பாடு ஏற்பட்டது.

பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை தேர்தல் தொகுதியில் ஒருபெடிவெவ(இலக்கம் 48) மத்திய கல்லூரிக்கு அருகாமையில் பாரிய தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. காலை 11.00 மணியளவில் ஐ.மு.சு.மு வேட்பாளர் அனுல ரவிந்திர விதானகமகே (விருப்பு வாக்கு இலக்கம் 06) மோட்டார் சைக்கிள் ஒன்றில் டி.எம் முதுபன்டா (ஐ.தே.க. பிரதிநிதி, ரிதிமலியத்த பிரதேச சபை) அவர்களின் வீட்டிற்கு சென்று அவரையும் அவரது மனைவியையும் தாக்கியுள்ளார். பின்னர் முதுபண்டா உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்து செல்லப்பட்டு வாட் இலக்கம் 08 இல் பொலிஸ் பாதுகாப்பின் கீழ் சிகிச்சை அளிக்கப்பட்டார். இது தொடர்பாக முதுபண்டா மஹியங்கனை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்றை மேற்கொண்டுள்ளார். பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இலங்ககோன் சம்பவத்தை உறுதிப்படுத்தினார். இச்சம்பவம் UNP பதுளை பாராளுமன்ற உறுப்பினரான லக்ஷ்மன் செனவிரத்ன அவர்களின் செயலாளரினால் CMEV நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டது. இச் தாக்குதல் சம்பவம் தொடர்பான அனுரவிதானகமகே அவர்களை தொடர்பு கொண்ட போது இச் சம்பவத்தில் தனக்கு தொடர்பு இல்லை என தெரிவித்தார்.

**வாக்களிப்பு வேளையில் தொடரான பிரச்சார நடவடிக்கைகள்.**

காலை 11.20 அளவில் பதுளை மாவட்டத்தின் ஹாலிஎல தேர்தல் பிரிவில் யல்வர்ட்டன் தோட்டப் பாடசாலை (வாக்குச்சாவடி இலக்கம் 28) அருகாமையில் ஐ.மு.சு.மு வேட்பாளர்களான எஸ்.எச் சோமபால (வேட்பாளர் இலக்கம் 11) மற்றும் சட்டத்தரணி

சுஜீவ ஜயசிங்க (வேட்பாளர் இலக்கம் 21) ஆகியோரின் இலக்கங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. CMEV கள கண்காணிப்பாளர் அறிக்கையின் படி E.J.P சந்திரகுமாரி உள்ளிட்ட 06 பேரை கொண்ட குழுவினரே இவ்வாறு துண்டுப்பிரசுரங்களை விநியோகித்துள்ளனர். இக்குழு அங்கிருந்து கலையுமாறு பொலிஸாரினால் இருமுறை வேண்டப்பட்டது. ஐ.தே.ம.சு.முன்னணியின் மேற்குறிப்பிட்ட வாக்குச்சாவடியின் கட்சி முகவரான சந்திர குமாரியால் துணை தெரிவத்தாட்சி அலுவலகர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டுள்ளார்.

காலை 10.30 மணியளவில் பதுளை மாவட்டத்தில் வெலிமடை தேர்தல் பிரிவில் ப/குருதலாவ புனித தோமயார் வித்தியாலயத்திற்கு (வாக்குச் சாவடி இலக்கம் 48) தனது பதாகைகளால் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் (51-9105) வருகை தந்த ஸ்ரீ.ல.மு.க. வேட்பாளர் ஏ.எஸ்.எம் சவாஹிர் (வேட்பாளர் இலக்கம் 02) வாக்குச்சாவடிக்கு முன்னால் நின்று அவருடைய ஆதரவாளர் குழு ஒன்றுடன் ஏறத்தாள அரைமணித்தியாலயம் கதைத்துக்கொண்டிருந்ததாக CMEV கண்காணிப்பாளர் அறிவிக்கின்றார்.

காலை 10.20 மணியளவில் பதுளை மாவட்டத்தின் ஹபுத்தளை தேர்தல் தொகுதியின் ப/சொரகுனே மகா வித்தியாலயம் (வாக்குச் சாவடி இலக்கம் 35) அருகாமையில் ஐ.ம.சு.மு. வேட்பாளர் ஹேமா ரத்னாயக்க (வேட்பாளர் இலக்கம் 24) அவர்களின் படங்கள் அடங்கிய பிரச்சார துண்டுப்பிரசுரங்கள் விசிரப்பட்டன என CMEV கள கண்காணிப்பாளர் அறிவிக்கின்றார்.

காலை 11.40 மணியளவில் பதுளை மாவட்டதில் ஹாலிஎல தேர்தல் தொகுதியின் ப/யல்வட்ரோன் தோட்டப் பாடசாலை (வாக்குச்சாவடி இலக்கம் 28) அருகாமையில் ஐ.தே.க. வேட்பாளர் ஹரின் பெர்னந்து (வேட்பாளர் இலக்கம் 23) அவர்களின் துண்டுப்பிரசுரங்கள் விசிரப்பட்டுக் கிடந்ததாக CMEV கண்காணிப்பாளர்கள் அறியத்தந்ததுடன் அவ் வாகனத்தின் இலக்க தகட்டை தம்மால் அடையாள காண முடியாமல் போனது எனவும் தெரிவித்தார்.

மதியம் 12.25 மணியளவில் மொனராகலை மாவட்டத்தில் மொனராகலை தேர்தல் தொகுதியில் அத்தமுள்ள கனிஷ்ட பாடசாலை (வாக்குச்சாவடி இலக்கம்23) அருகாமையில் கூடியிருந்த ஐ.ம.சு.மு. வேட்பாளர் சசின்திர ராஜபக்ஷ (வேட்பாளர் இலக்கம் 13)அவர்களின் ஆதரவாளர் குழு ஒன்று வருகை தருகின்ற வாக்காளர்களின் கைகளில் வெற்றிலைச் சின்னம் மற்றும் விருப்பு வாக்கு இலக்கம் 13 என்பவற்றை முத்திரையிட்டதாக CMEV கண்காணிப்பாளர் அறியத்தருகின்றார்.

மதியம் 02.40 மணியளவில் மொனராகலை மாவட்டத்தில் மொனராகலை தேர்தல் பிரிவில் மதுகள்ள மகா வித்தியாலயம் (வாக்குச்சாவடி இலக்கம் 60) அருகாமையில் அமைந்துள்ள பாதையில் ஜே.வி.பியின் மணி சின்னமும் ஐ.ம.சு.மு. வேட்பாளர் ஆராச்சிகே விஜித வேருகொட (வாக்காளர் இலக்கம் 04) அவர்களின் விருப்பு வாக்கு இலக்கமும் அடையாளப்படுத்தப்பட்டிருந்ததாக CMEV கண்காணிப்பாளர் அறிவிக்கின்றனர்.

**வாக்காளர்கள் பிரயாணப்படுத்தப்படல்**

காலை 10.30 மணியளவில் பதுளை மாவட்டத்தில் அபுதலை என்ற பிரிவில் ராகல்ல தமிழ் மகா வித்தியாலயம் (வாக்குச் சாவடி இலக்கம் 05)ற்கு வாக்காளர்கள் ஜீப் வண்டிகளில் (NVC – 6260 மற்றும் KI – 7862) ஐ.மசு.மு. வேட்பாளர் எம்.கே விஸ்வநாதன் (வேட்பாளர் இலக்கம் 17)அவர்களின் ஆதரவாளர் குழுவினரால் பிரயாணப்படுத்தப்பட்டதாக CMEV கண்காணிப்பாளர் அறியத்தருகின்றார்.

காலை 11.00 மணியளவில் பதுளை மாவட்டத்தில் அபுதலை தேர்தல் பிரிவில் அபுதலை தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (வாக்குச் சாவடி இலக்கம் 01)ற்கு வாக்காளர்கள்

வேன் மூலம் (62-1936) ஐ.மசு.மு. வேட்பாளர் எம்.கே விஸ்வநாதன் (வேட்பாளர் இலக்கம் 17) அவர்களின் ஆதரவாளர் குழுவினரால் பிரயாணப்படுத்தப்பட்டதாக CMEV கண்காணிப்பாளர் அறியத்தருகின்றார்.

காலை 12.25 மணியளவில் மொனராகலை மாவட்டம் மொனராகலை தேர்தல் தொகுதி கந்த உட பங்குவ மகா வித்தியாலயம் (வாக்குச் சாவடி இலக்கம் 07)ற்கு ஐ.ம.சு.மு. வேட்பாளர் (வாக்காளர் இலக்கம் 13) சசின்தர ராஜபக்ஷவின் படங்கள் ஒட்டப்பட்ட வெள்ளை நிற வேன் ஒன்றில் (HF 49-52) மூலம்வாக்காளர்கள் பிரயாணப்படுத்தப்பட்டதாக CMEV கண்காணிப்பாளர் அறிவிக்கின்றார்.

காலை 11.00 மணியளவில் யாழ்ப்பாணம் மாநகரசபை யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்திற்கு (வாக்குச்சாவடி இலக்கம் 22)விசேட சேவை என்று அடையாளப்படுத்தப்பட்ட பஸ் வண்டி ஒன்றின் மூலம் வாக்காளர்கள் பிரயாணப்படுத்தப்பட்டதாக CMEV கண்காணிப்பாளர் அறியத் தருகின்றார்.

**CMEV கண்காணிப்பாளர்கள் வாக்களிப்பு நிலையத்திற்கு செல்ல அனுமதிக்கப்படவில்லை.**

காலை 11.40 மணியளவில் CMEV யின் நடமாடும் கண்காணிப்பு குழுவினர் வாக்குச்சாவடி நிலையப் பொறுப்பாளரினால் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை. பதுளை மாவட்டத்தின் மஹியங்கன தேர்தல் தொகுதியின் திக்கென்டியாலிய ஆரம்ப பாடசலை (வாக்குச் சாவடி இலக்கம் 58)ற்கு CMEV இன் கள கண்காணிப்பாளர் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை என்பதுடன் நிலையப்பொறுப்பதிகாரி தேர்தல் ஆணையாளரின் அனுமதிக் கடிதத்தையும் பார்ப்பதற்கும் மறுத்துவிட்டார்.

மாலை 3.25 மணியளவில் பதுளை மாவட்டத்தில் மஹியங்கனை தேர்தல் தொகுதியின் அபயப்புர கனிஷ்ட வித்தியாலயம் (வாக்குச்சாவடி இலக்கம் 43) ற்கு CMEV நிறுவனத்தின் நடமாடும் கண்காணிப்பு குழுவினர் உட்செல்ல நிலையப்பொறுப்பதிகாரியினால் அனுமதிக்கப்படவில்லை என CMEV கள கண்காணிப்பாளர் அறிவிக்கின்றார். அக் கண்காணிப்பாளர் வாக்குச்சாவடிக்குள் இருந்து வெளியேற்றப்பட்டதுடன் அவரது உத்தியோகப்பூர்வ பத்திரங்கள் கவனத்தில் கொள்ளப்படவும் இல்லை.

மதியம் 2.30 மணியளவில் மொனராகலை மாவட்டத்தில் வெள்ளவாய தேர்தல் தொகுதியில் அம்பேகமுவ வாக்குச்சாவடி ரத்தபலாஅரகம கனிஷ்ட வித்தியாலயம் அம்பேகமுவ (வாக்குச்வாவடி இலக்கம் 93) இன் நிலையப்பொறுப்பதிகாரியினால் CMEV கள கண்காணிப்பாளர்கள் தேர்தல் ஆணையாளரின் அனுமதிக் கடிதத்தை சமர்பித்த போதும் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பகல் 12.00 மணியளவில் மொனராகலை மாவட்டத்தில் மொனராகலை தேர்தல் தொகுதியில் நிசங்க மத்திய மகா வித்தியாலயம் படல்கும்புர (வாக்குச்சாவடி இலக்கம் 81) இன் நிலைய பொறுப்பதிகாரியினால் CMEV யின் நடமாடும் கண்காணிப்பாளர் தேர்தல் ஆணையாளரிடம் அனுமதி கடிதத்தை சமர்ப்பித்ததன் பின்னரும் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை.

**வாக்காளர் ஆளடையாளப்படுத்தல் ஆவணங்கள் தொடர்பாக**

காலை 10.30 மணியளவில் பதுளை மாவட்டத்தில் பதுளை தேர்தல் பிரிவு ப/சிறிரத்னபால கனிஷ்ட வித்தியாலயம் வாக்குச்சாவடி இலக்கம் 21 இல் செல்லுப்படியாகும் சாரதி அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பித்த வாக்களிக்க முயற்சித்த 5 தொடக்கம் 6 வாக்காளர்கள் வரையில் வாக்களிக்க விடாது தடுக்கப்பட்டுள்ளனர். அப்பிரதேசத்திற்குரிய கிராம உத்தியோகத்தர் தற்காலிக அடையாள அட்டைகளை

விநியோகிக்க வில்லை என தெரிவிக்கப்படுகின்றது. மேலும் குறிப்பிட்ட நிலையத்தின் நிலையப் பொறுப்பதிகாரி தேர்தல் ஆணையாளரினால் அங்கீகரிக்கப்படும் ஆவணம் ஒன்றாக சாரதி அனுமதிப்பத்திரம் தனக்கு வழங்கப்பட்டுள்ள அறிவித்தலில் குறிப்பிடப்படவில்லை என்றும் கூறியுள்ளார்.

மாலை 3.30 மணியளவில் மொனராகலை மாவட்டத்தில் வெள்ளவாய தேர்தல் தொகுதியில் ஒக்கம்பிட்டிய மகா வித்தியாலய (வாக்குச்சாவடி இலக்கம் 26) 19 வாக்காளர்கள் அங்கீகரிக்கக்கூடிய ஆளடையாள ஆவணங்களை நிரூபிக்க தவறியதாக வாக்களிக்க விடாது தடுக்கப்பட்டதாக CMEV யின் கள கண்காணிப்பாளர்கள் அறிவிக்கின்றனர்.

மாலை 3.30 மணியளவில் பதுளை மாவட்டத்தில் ஹாலிஹுல தேர்தல்தொகுதியில் ப/வேவல்ஹின்ன வித்தியாலயம் வாக்குச்சாவடி இலக்கம் 50 இல் தோட்ட அடையாள அட்டையுடன் வந்த 60 வாக்காளர்கள் வரையில் வாக்களிக்க விடாது நிலையப்பொறுப்பதிகாரியினால் தடுக்கப்பட்டதுடன் அவர்களின் வாக்காளர் அட்டைகள் நிலையப்பொறுப்பதிகாரியினால் சேகரிக்கப்பட்டதாக CMEV கள கண்காணிப்பாளர் அறிவித்தார். அத்துடன் அவ் வாக்காளர் அட்டைகள் அழிக்கப்பட்டதாகவும் CMEV கண்காணிப்பாளர் குறிப்பிட்டார்.

மாலை 3.45 மணியளவில் யாழ்ப்பாண மாநகரசபை நாவன்துறை புனித நிகலொஸ் மத்திய கல்லூரியில் (வாக்குச்சாவடி இலக்கம் 45) இல் அருகாமையில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த பற்றுச்சீட்டு படிவத்தினை காண்பித்து வாக்களிக்க முயன்ற 50 தொடக்கம் 60 வாக்காளர்கள் வாக்களிக்க விடாது தடுக்கப்பட்டனர். இவர்கள் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) 1997 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது. இந்நிறுவனம், மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் (CPA), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் INFORM மனித உரிமைகள் தொடர்பான ஆவணப்படுத்தல் நிலையம் ஆகிய நிறுவனங்களின் ஒன்றியமாகும். மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் செயலகமாக செயற்படுகின்றது.

| | | |
|---|---|---|
| **கலாநிதி பா.சரவணமுத்து**<br>**இணை-அழைப்பாளர்** | **சுனில் ஜயசேகர**<br>**இணை-அழைப்பாளர்** | **உதய கலுபதிரண**<br>**இணை-அழைப்பாளர்** |